வினியோகத்தை நிறுத்துவது போன்ற பொறுப்பு மாவட்ட ஆட்சியாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதை ஒட்டி சில சமயங்களில் அரிசி வினியோகம் சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் நிறுத்தப்பட்டிருக்கலாம்.

* 169 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state the reason for the non-distribution of rice in Dindigul, Theni, etc., in the first week of October 1968 ?

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

திண்டுக்கல், தேனீ முதலிய இடங்களில் 1968 அக்டோபர் முதல் வாரத்தில் அரிசி போடாததற்குக் காரணம் யாது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: சட்டபூர்வமான உணவுப் பங்கீடு அமுலில் உள்ள இடங்களில், மக்களுக்கு உணவு தான்யங்கள் வழங்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுள்ளது. குடும்ப கார்டு அமுலில் இருக்கும் இடங்களில் தனியார் வியாபாரத்திற்கு எவ்வித தடையும் இல்லை. குடும்ப கார்டு உள்ள இடங்களில் உள்ளவர்கள் வெளிச் சந்தையில் உணவு தான்யங்களை வாங்கி உபயோகிக்க எவ்வித தடையும் இல்லை. ஆகவே, இந்த இடங்களில், அறுவடை உள்ள போதும், உணவு தான்யங்கள் வெளிச் சந்தையில் தாராளமாக கிடைக்கும்போது, அதற்கு தகுந்தாற்போலவும் அரசாங்கத்தின் கையிருப்பை ஒட்டியும் மக்களுக்கு வழங்கும் உணவுப் பொருள்களின் அளவு மாற்றப்படுகிறது. குடும்ப கார்டு அமுலில் உள்ள இடங்களில், அறுவடை நடைபெறுகின்றதா என்பதையும், வெளிச்சந்தையில் உணவு தான்யங்கள் கிடைக்கின்றதா என்பதையும் அரசாங்கத்தின் கையிருப்பு முதலியவைகளை பொறுத்தும் தான்யங்களின் அளவை கூட்டியோ குறைத்தோ வழங்கும் பொறுப்பு மாவட்ட ஆட்சியாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதை ஒட்டி சில சமயங்களில் உணவு வினியோகத்தின் அளவு சூழ் நிலைக்கு தகுந்தாற்போல் மாற்றப்பட்டிருக்கலாம்.

Educational Institutions run by the Central Government.

* 170 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the names of Educational Institutions in Tamil Nadu which are run by the Central Government; and

(*b*) the amount of capital invested in them by the Central Government ?

மத்திய அரசினால் நடத்தப்படும் கல்வி நிலையங்கள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் மத்திய அரசினால் நடத்தப்படும் கல்வி நிலையங்கள் என்னென்ன இருக்கின்றன?